வேலூர்மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ஒ.மு.எண்.2435/ஆ3/2023 நாள். 13 .06.2023

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – வேலூர்மாவட்டத்திலுள்ள அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் இணைய வசதி மற்றும் கணினி வசதியுடன் கூடிய உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் (Hi Tech Lab) நிறுவப்பட்டது – ஆய்வக உபகரணங்கள், களவு, சேதம் அடைதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திட அறிவுரைகள் வழங்குதல் – சார்பு |
| பார்வை | சென்னை.6. பள்ளிக் கல்விஆணையரக இணை இயக்குநரின் ( தொழிற்கல்வி ) செயல்முறைகள் ந.க.எண்.76896 / பிடி1/இ3/2017 நாள்.26.5.2023 |

-----

பள்ளிக் கல்வித் துறையின்கீழ் வேலூர் மாவட்டத்தில் செயல்படும் அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளுக்கு (Larsen & Toubro) நிறுவனம் மூலமாக உயர்நிலைப் பள்ளிகளுக்கு 10 கணினிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 20 கணினியுடன் கூடிய உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் (Hi Tech Lab) நிறுவப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டில் உள்ளது.

இந்நிலையில் சில பள்ளிகளில் கணினி உபகரணங்கள் களவு ஏற்பட்டுள்ளதாகவும், சேதமடைந்துள்ளதாகவும் தெரிய வருவதாக பார்வையில் காணும் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பள்ளிகளில் கணினி உபகரணங்கள் களவு போனது சார்பாக சில பள்ளிகளில் முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு மேற்கொள்ளப்படாமல் உள்ளது. கணினி உபகரணங்கள் களவு போனதற்கு சார்ந்த தலைமை ஆசிரியர்கள் இதுநாள் வரை எந்தநடவடிக்கையும் மேற்கொள்ளாமல் இருப்பது கண்டிக்கதக்கது எனவும் இவ்வாறான நிகழ்வுகளில் சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியரே முழுப் பொறுப்பேற்க வேண்டும்.

மேலும் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறாமல் தடுத்திட கீழ்கண்ட நடைமுறைகள் பின்பற்றி செயல்பட அனைத்து அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

1.தலைமை ஆசிரியர் ஒரு குழு அமைத்து (கணினி ஆசிரியர் உட்பட) அக்குழுவானது உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தை முறையாக பராமரிக்க வேண்டும். உயர் தொழில் நுட்ப ஆய்வக அறையானது முழு பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

2.மேல்நிலைப் பள்ளிகளில் கணினி ஆசிரியரையும் உயர்நிலைப் பள்ளிகளில் கணினியை கையாளத் தெரிந்த ஏதேனும் ஒரு பாட ஆசிரியரையும் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்களுக்கு பொறுப்பாளராக நியமித்தல் வேண்டும்.

இவ்வாய்வகங்களுக்கு தலைமை ஆசிரியரால் நியமிக்கப்படும் பொறுப்பு ஆசிரியரும் பள்ளித் தலைமை ஆசிரியரும் முழு பொறுப்பாளர்கள் ஆவார்.

3. உயர் தொழில்நுட்ப ஆய்வகங்களை கையாளும்போது, நிறைவடையும்போதும் ஆசிரியர்கள் ஒரு Entry Register–ல் பதிவுசெய்யும் வகையில் பதிவேடு ஒன்று சார்ந்த பள்ளியில் பராமரிக்கப்பட வேண்டும்.

4.மாதாந்திர இருப்பு பதிவேடு ( Monthly Stock Register) பராமரிக்கப்பட வேண்டும்.

5. ஆய்வக அறையில் மின்சார இணைப்புகள் உறுதியாக உள்ளனவா என உறுதி செய்தல் வேண்டும். மின்கசிவு போன்ற நிகழ்வுகளால் கணினி ஆய்வகம் சேதமடையாமல் தடுத்திட அவ்வப்போது மின் இணைப்புகளை உரிய பணியாளரைக் கொண்டு சரிபார்க்க வேண்டும்.

6. தேவைப்படும் இடங்களில் கிரில் கேட் அமைத்திட பள்ளித் தலைமை ஆசிரியர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

7. உயர் தொழில்நுட்ப ஆய்வகங்களின் முக்கியத்துவத்தினை உணர்ந்து உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் அமைத்திட சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

( ஓம்) க.முனுசாமி
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
அரசு உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்.
சென்னை.6. பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநர் ( தொழிற்கல்வி ) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

.